We Excel in
Bridal Dressing
For Hindu & Christian
Weddings

YOGI
Beauty Parlour

71, Nayanmar Veethy,
Kachcheri Nallur Road,
Nallur,
Jaffna.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இந்து, கிறிஸ்தவ
மணப் பெண்களை
நவீன முறையில்
அலங்காரம் செய்யவும்
Facial Bleaching,
Eyebrow Shaping]
Waxing and Hair Cuts
செய்து கொள்ளவும்
YOGI
BEAUTY PARLOUR
[ONLY LADIES]
71, நாயன்மார் வீதி,
நல்லூர்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 17 ஞாயிற்றுக்கிழமை (01 — 01 — 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 36

# 2ஆம் கட்ட பேச்சு நாளை;

# அரசுத் தரப்பு இணக்கம்!

## அனுருத்த வியாழனன்று தலைவர் பிரபாவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜனவரி 1

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுக்களை நாளை திங்கட்கிழமை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு இணங்கியுள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் கடந்த வியாழனன்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்தது.

அந்தக் கடித்ததில் இரண்டாம் கட்டப் பேச்சை இராண்டாம் திகதி நடத்துவதற்கு அரசு இணங்கியிருப்பது குறித்து பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

முதலில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்தே பேச்சு நடத்த வேண்டும் என்றும் —

அதன் பின்னரே இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து விவாதிக்க வேண்டும் என்றும்—

தமிழீழ தேசியத் தலைவர் வலியுறுத்தியதை அரசு ஏற்றுள்ளதாகத் தெரிகிறது.

இதன்படி —

நாளை நடைபெறவிருக்கும் உத்தேச பேச்சுக்களில் புனரமைப்பு, போர் நிறுத்தம், பாதை திறத்தல் ஆகியவை

(6ஆம் பக்கம் பார்க்க)

**உதயன் வருடவழிகாட்டி**

நான்கு வர்ண அழகுறு வருட வழிகாட்டி நாளை திங்கட்கிழமை உதயனுடன் இலவசமாக வழங்கப்படும். தவறாது கேட்டு வாங்குங்கள்.

## தீர்மானங்களை ஏற்பதில்லை என முடிவு!

தஞ்சாவூரில் இன்று ஆரம்பமாகும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 9 ஆவது தமிழாராய்ச்சி மாநாடு குறித்து எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்பதில்லை என்று தமிழாராய்ச்சி மாநாட்டு இலங்கைக் கிளை அறிவித்துள்ளது. (ஐ-4)

முச்சந்தி முரலி



அப்ப... தை பிறக்க வழி பிறக்குது போலை.....!

## புத்தாண்டு வாழ்த்து

மலரும் **1995** எல்லோர் மனங்களிலும் நிறைவு தந்து, வளம் சேர்த்து, மங்களம் பெய்து, அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க உதவ வேண்டி, உதயனின் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரியனவாகுக.

பாப்பரசரின் வருகையை ஒட்டி

# 20 நாள் யுத்த நிறுத்தம் ஆயர் மன்றம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 1

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வடக்கில் இருந்து வரும் கத்தோலிக்க மக்களின் வசதி கருதி இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு கத்தோலிக்கத் திருச்சபை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாப்பரசர் விஜயம் செய்யும் நாளுக்கு முதல் 10 தினங்களுக்கு முன்பும், அடுத்த 10 தினங்களுக்கும் கிளாலி கடல் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு இலங்கை ஆயர் மன்றம் அரசைக் கேட்டுள்ளது.

ஆயர் மன்றத்தின் சார்பில் மேற்படி கோரிக்கை அடங்கிய கடிதத்தை கொழும்பு மேலதிக ஆயர் அதி வண். மல்க்கம் ரஞ்சித் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பாப்பரசரைத் தரிசிக்க வடக்கிலிருந்து வரும் கத்தோலிக்க மக்களின் வசதி கருதியே இந்த இருபது நாள் யுத்த நிறுத்தக் கோரிக்கை விடுக்கப் பட்டிருக்கிறது. (உ-ஐ-3)

# மாலைதீவிலிருந்து சந்திரிகா புலிகளுக்கு பதில் கடிதம்!

கொழும்பு, ஜன. 1

தற்சமயம் தவிப்பட்ட விஜயம் ஒன்றை மாலைதீவில் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் தொடர்பாக அங்கிருந்து ஒரு பதில் கடிதத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அனுப்பியுள்ளதாக நேற்றைய 'த ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மாலைதீவில் தங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழனன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்புமாறு தெரிவித்து ஒரு கடிதத்தை கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியுள்ளார். — என்று அந்தச் செய்யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி நேற்றைய 'த ஐலண்ட்' பத்திரிகையில் பெட்டி கட்டி பிரசுரிக்கப்பட்டுள்ளது. (உ-3

பரபரப்பான சூழ்நிலையில்

## உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் இன்று ஆரம்பம்

சென்னை, ஜன. 1

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சாவூரில் இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு இந்த மாநாடு நடைபெறும்.

ஜனாதிபதியின் சார்பில் உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் மாநாட்டை இன்று காலை தொடக்கி வைப்பார்.

மாநாட்டின் தொடக்க விழாவில் 54 அலங்கார ஊர்திகளின் பேரணி ஒன்றும் நடைபெறவுள்ளது.

மாநாட்டின் நிறைவு விழாவில் — எதிர்வரும் 5 ஆம் திகதி — பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்து கொள்வார்.

பல நாடுகளில் இருந்தும் சுமார் 500 அறிஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த தமிழ், மற்றும் சிங்கள அறிஞர்களுக்கு இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இது தமிழாராய்ச்சி மாநாடு அல்ல. ஆளும் அ. தி. மு. கவின் தனிப்பட்ட ஆடம்பரவிழா என்று தமிழகத்தின் முக்கிய எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி மாநாட்டைப் பகிஷ்கரித்துள்ள நிலையில்—

இதற்கு முன் எந்தத் தமிழாராய்சி மாநாட்டின்போதும் இருந்திராத பரபரப்பான ஒரு சூழ்நிலையில் இம்முறை மாநாடு நடைபெறுவதாக செய்தி ஏஜன்ஸிகள் தெரிவித்தன. (ஐ-க-4)

## வாகனங்களில் வந்தே புலிகள் தாக்கினர்!

### 2 லெப்டினன்களை காணவில்லை

கடந்த புதன் இரவு மட்டக்களப்பு பூமாஞ்சோலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது அரச தரப்பில் இரு லெப்டினன்கள் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தங்களது வாகனங்களில் வந்திறங்கியே புலிகள் இத் தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

—கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது. உ)

# முக்கிய பிரமுகர்களைக் கொல்ல கொழும்புக்குள் ஆறு கரும்புலிகள்!

சந்திரிகா, ரத்வத்தை, கதிர்காமர், அஷ்ரப், நீலன் உட்பட

கொழும்பு, ஜன. 1

ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர்கள் ரத்வத்தை, கதிர்காமர், அஷ்ரப் ஆகியோரையும் மற்றும் நீலன் திருச்செல்வம் உட்பட தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களையும் கொலை செய்யும் திட்டத்துடன் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த அறுவர் கொழும்பு வந்துள்ளனர்.

பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு இது பற்றிய தகவல் கிடைத்துள்ளதாக வேக்ஹவுஸ் சிங்கள நாளிதழான ''தினமின'' தெரிவித்துள்ளது.

இத்தகவலையடுத்து தலைநகர் கொழும்புக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் அனைத்தையும் துருவித்துருவி சோதனையிடும் வேலைகளில் பொலிஸாரும் இராணுவத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சமரச முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம்

# இராணுவத் தளபதி புலிகளுக்கு ஒலிப்பதிவு நாடாமூலம் செய்தி!

கொழும்பு' டிச. 1

''அரசாங்கம் எடுத்துவரும் சமரச முயற்சிகளுக்கு பாதுகாப்புப் படையினர் எந்த விதத்திலும் இடையூறாகச் செயற்படமாட்டார்கள்; பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள்''

—இவ்வாறு தெரிவிக்கும் உறுதி மொழியை ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி தமது குரலில் ஒலிப்பதிவு செய்து, அந்த ஒலிப்பதிவு நாடாவை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்:

கொழும்புப் பத்திரிகை ஒன்று இவ்வாறு நேற்று செய்தி வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இராணுவத் தளபதியின் உறுதிமொழி அடங்கிய ஒலிப்பதிவு நாடா யாழ்ப்பாணத்துக்கு நம்பிக்கையான ஒருவர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு, புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்திடம் கையளிக்கப்பட்டது —

இச் செய்தியை இராணுவத் தளபதியின் குரலில் கேட்ட அன்ரன் பாலசிங்கம், ''எமது தலைமைப்பீடம் எடுக்கும்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

யாழ். போதனா வைத்தியசாலையில

## நோயாளரை பார்வையிட "பாஸ்" முறை இனி இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவதற்கு நடைமுறையில் இருந்த ''பாஸ்'' முறை இன்று தொடக்கம் நீக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் நோயாளரை பார்வையிடுவோரின் எண்ணிக்கை முன்னரைவிட தற்போது குறைந்திருப்பதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரும் இணைந்து 'பாஸ்' முறையை நிறுத்துவதென முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்தது.

'பாஸ்' முறையை நடைமுறைப்படுத்தும் பணியை இதுவரை செய்துவந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு உதவும் தொண்டுப் பணியில் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை

[6ஆம் பக்கம் பார்க்க]

# 5 நிமிடங்களில் புலிகள் முகாமினுள் புகுந்தனர்!

### காயமடைந்த சிப்பாய் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 1

'நள்ளிரவு 12 மணியளவில் சுமார் முந்நூறு வரையான விடுதலைப் புலிகள் எமது முகாமைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். ஐந்து நிமிட நேரத்துக்குள் முகாமினுள் புகுந்த அவர்கள் பின்னர் தாறுமாறாகச் சுட்டனர். அதன்பின் முகாமை தீயிட்டுக் கொளுத்தினர்'.

''தாம்பராவெளி பூமாஞ்சோலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட போது படுகாயமடைந்து பொலனறுவை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இராணுவச் சிப்பாய் ஒருவர் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## யாழ். பயணிகள் மீது நடந்த தாக்குதல் பற்றி விசாரணை

யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலி ஊடாக வவுனியா வந்த வடபகுதிப் பயணிகள் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குல் குறித்து ஆராயும்படி ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவைப் பணித்துள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பயணிகள் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானதாகவும்—

பலர் தடுக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் எம். பி. ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்தே விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதாகக் கூறப்பட்டது. (உ-க)

## படையணிகளை கிழக்குக்கு புலிகள் நகர்த்துகின்றனர்!

கொழும்பு, ஜன. 1

வடக்கில் இருந்து தமது படையணிகளை விடுதலைப் புலிகள் மீண்டும் கிழக்குக்கு நகர்த்தி வருவதாக ''த ஐலண்ட்'' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த அரசு திட்டமிடுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டதையடுத்து கிழக்கில் இருந்து படையணிகளை வடக்குக்கு விடுதலைப் புலிகள் நகர்த்தியிருந்தனர்.

வடக்கின் மீதான படையினரின் இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதை அடுத்து விடுதலைப் புலிகளின் உயர் கட்டளைப்பீடம் இக்குழுக்களை நகர்த்தி வருவதாக அந்தச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. (உ-3)

## அமைச்சர் பௌஸி மீது தாதியர் போர்ப்பிரகடனம்

கொழும்பு, ஜன. 1

சுகாதார அமைச்சர் ஏ. எச் எம் பௌஸிக்கு எதிராக பொதுச் சேவை தாதியர் சங்கத் தலைவர் முறுதெட்டுவே ஆனந்த தேரர் கடந்த வியாழனன்று போர்ப் பிரகடனம் செய்தார் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

''சுகாதார அமைச்சராக பதவி வகிப்பதற்கு அவர் பொருத்தமற்றவர்''.

''தமது கோரிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் வரை — தற்காலிகமாக ஒரு வருடத்துக்கு — தாதியருக்கு மூவாயிரம் ரூபா அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கையை நிராகரித்ததன் மூலம் வேலை நிறுத்தத்துக்கு தாதியரை தள்ளியவரே இந்த அமைச்சர் தான்''.

''பதவியேற்றதிலிருந்து சுகாதார சேவைகளைச் சீர் செய்ய அமைச்சர் என்ன செய்திருக்கிறார்? — எல்லோரையும் எல்லா வேளைகளிலும் தவறாக வழிநடத்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வியாழனன்று சந்திரிகா கொள்கைப் பிரகடனம்

கொழும்பு. ஜன.1

இனப் பிரச்சினை, பொருளாதாரம் மற்றும் தேசிய விவகாரங்கள் சம்பந்தப்பட்ட அரசின் கொள்கைப் பிரகடனத்தை எதிர்வரும் வியாழனன்று (ஆறாம்திகதி) நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்கும் போது ஜனாதிபதி சந்திரிகா வெளியிடுவார் என கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (உ)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் மோசடி?

யாழ்ப்பாணம், ஜன. 1

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் புள்ளிகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் சில மாணவ, மாணவிகளின் புள்ளிகள் திருத்தப்பட்டது உட்பட பல்வேறு ஊழல்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இப்பரீட்சையில் அதிக புள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏலவிற்பனை 19·01·1995

1. ஐந்து தலைநாக பாம்பு வாகனம் ஒன்று
2. சிறிய சப்பறம் யாழிகள், பீடத்துடன் ஒன்று

தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரங்களில் பார்வையிடலாம்
**05 — 01 — 1995 — 19 — 01 — 1995** வரை

● தொடர்பு கொள்ளவும்:
தலைவர்,
ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள்-
தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.
[34444] - தேவஸ்தானம்.

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## THE JAFFNA EDUCATION CENTRE
(சாந்தி சினிமா முன்பாக)

வருடம் **4 – 10, O/L, A/L**
**SPOKEN ENGLISH**
**SHORT – HAND TYPING**
இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: **02 - 01 - 1995**
- இயக்குநர்.
[8174]

★ வாடிக்கையாளர்கள்
★ நண்பர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
★ புத்தாண்டு வாழ்த்துக்கள் ★

புதிய பழைய பாடல்கள்
கொம்பைக் டிஸ் மூலம்
உடனுக்குடன் பதிவு செய்யவும்
பதிவு செய்த ஒலிப்பதிவு நாடாக்களை
உடனுக்குடன் வாங்கிக் கொள்ள
யாழ். நகரில் ஒரே ஒரு சிறந்த இடம்:
## ஸ்கை றோஸ் ஒலிப்பதிவு கூடம்
இல. 1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
எமக்கு வேறு எந்த கிளைகளும் இல்லை
[34462]

## A/L 95
## DAY CLASS
(94 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக)

| | | | |
|---|---|---|---|
| 8-00 | — Chemistry | திரு. குமரன் |
| 9-00 | — Physics | திரு. பத்மநாதன் |
| 10-00 | | |
| 10-15 | — Zoology | திரு. குணா |
| 10-15 | — Applied | திரு. குணம் |
| 11-15 | — Botany | திரு. நேசன் |
| 11-15 | — Pure | திரு. குணம் |

திங்கள், செவ்வாய், வியாழன் — பாடவகுப்பு
வெள்ளி — மீட்டல்
ஒரே கட்டணத்தில்—பாடவகுப்பு + மீட்டல்
மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்
ஆரம்பம்: **02 - 01 - 1995**
## BOND கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(8167)

## BECON
## கல்வி நிலையம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
## A/L 95 DAY CLASS
(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது)
பிரிவு III
(திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| இந்து நாகரிகம் / இந்துசமயம் | — | காரை செங்கா |

சனி, ஞாயிறு

| | |
|---|---|
| அளவையியல் | —திரு எஸ்.எஸ்.மனோகரன் |
| தமிழ் | —திருமதி மீரா |

ஆரம்பம்: 02 - 01 - 1995
திங்கள் 8.00 a.m
குறிப்பு:
அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
வேறு புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படமாட்டா
(சி/88)

# நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
**A/L 94** ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 01 - 01 - 1995 (ஞாயிறு)

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு. சோதி |
| புவியியல் | — | திரு. வேலா |

[சி-28]

## தையல் பயிற்சியாளர்கள் வேலை வாய்ப்பு பெறுவோர்
எமது நிலையத்தில் தையல் பயிற்சிபெற விரும்புவோரும், பல வகையான தையல் வேலை வாய்ப்பு பெறுபவர்களும் 15 - 01 - 1995 ற்கு முன் விண்ணப்பிக்குக!
★ பயிற்சிக் காலம், வேதனம் என்பன நேரில் பேசித் தீர்க்கலாம்.
சிற்றி காமன்ஸ்
"சிவபதி" இணுவில் மேற்கு,
[சி-72]

## ஐடியல் கல்வி நிலையம்
42, பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணம்,
(தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில்)
ஆண்டு 5 முதல் O/L வரை
புதிய பிரிவு வகுப்புகள்
ஆரம்பம்: **01 - 01 - 1995**
இன்று காலை 9 00மணி
✶ விசேட ஆங்கிலம், சிங்களம் வகுப்புகள் நடை பெறுகின்றன.
✶ SPOKEN ENGLISH (With Basic Grammar)
திரு T. சகாதேவன் (B.A, London)
முதல் பிரிவு ஆரம்பமாகிவிட்டது.
[34447]

## NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA
## 95/AL DAY CLASS
(பகல் நேரவகுப்புக்கள்)
(94ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு மட்டும்)
ஆரம்பம்: **02 - 01 - 1995**
திங்கள் 8மணி
திங்கள், செவ்வாய், வியாழன் வெள்ளி (8—12)
பௌதிகவியல்
இரசாயனவியல்
விலங்கியல்
தாவரவியல்
தூய / பிரயோக )— கணிதம்
★ நேர விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
(சி-94)

## YARL HALL
## கல்வி நிலையம்
[திருமறைக் கலா மன்றம் முன்பாக]
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
கிளை
பிரத்தியேக கல்வி நிலையம்
2, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
ஆண்டு 4 முதல் O/L
வரை புதிய பிரிவு வகுப்புகள்
ஆரம்பம்: **03 - 01 - 1995**
செவ்வாய் மாலை 4-00 மணி
✶ விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
மற்றும்
எமது [illegible]
[34446]


## புலிகளின் குரல் வானொலியில்

01 — 01 — 1995
ஞாயிறு இரவு
★ 8-01 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
★ 8-20 — கணப்பொழுது— சி. கண்ணம்மா எழுதிய "மேஜர் அசோகன்"
★ 8-25 — நேயர் கடிதங்கள்.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம் — "கவிதை பற்றி மனம் விட்டு"
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

02 — 01 — 1995
திங்கள் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை.
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்.
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி
ஞாயிறு மாலை ஒளிபரப்பு
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — சுதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-30 மாலை ஒலிபரப்பு நிறைவுபெறும்.


## தவறிவிட்டது
அரச திணைக்களம் ஒன்றுக்குச் சேர வேண்டிய கடிதக் கோவை ஒன்று தாண்டிக்குளத்திற்கும் கிளாவிக்கும் இடையில் தவறிவிட்டது. சில முக்கியமான கடிதங்கள் இக் கோவையில் அடங்கியுள்ளன. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். செயலகத்தில் (கச்சேரி) திட்டப்பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.
— அரச ஊழியர்
(சி-10136)

## SHAMROCK
யாழ். சுண்டுக்குளி
**O/L, Yr. 10 & 9**
ஆரம்பமாகியுள்ளது.
விஞ்ஞானம்
Mr. J.R. சூரி
கணிதம்
Mr. தயாளன்
சமூகக்கல்வி
Mr. இக்னேசியஸ்
தமிழ்
Miss. ஜெஸ்மின்
வர்த்தகம்
Mr. எல்விஸ்
ஆங்கிலம்
Mrs. சண்.
(34466)

## O/L DAY CLASS
நெல்லியடியில்
சயன்ஸ்
அக்கடமி
பருத்தித்துறையில்
தம்-சிட்டி வீதியில்
## N. C. A.
கல்வி நிறுவனம்

| | |
|---|---|
| தமிழ் | 8 — 9 |
| கணிதம் | 9 — 10 |
| விஞ்ஞானம் | 10 — 11 |
| சமூகம் | 11 — 12 |
| ஆங்கிலம் | 12 — 1 |

கிழமையில்
நான்கு நாட்கள்
ஆரம்பம்:
**06-01-1995**
காலை 8 மணி
[34463]

# முக்கிய அறிவித்தல்
கடந்த ஆண்டுகளில் கொக்குவில் உப அலுவலகத்துக்கு (V. C.) அருகாமையில், பிறவுண் வீதியில் எம்மால் நடத்தப்பட்டு வந்த ஆட்டிறைச்சிக் கடையை இன்று (01-01-95) தொடக்கம் கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலுக்கு அருகாமையில் அரசடிச் சந்தியிலுள்ள கடை இல. 5இல் நடத்தவுள்ளோம் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
நன்றி;
S. S. தம்பி (செல்வம்), விக்டர்.
கூழாவடி லேன்,
ஆனைக்கோட்டை.
(34434)

# புத்தாண்டே வருக வருக!
● வணிகர் கழகமது
வரவேற்று மகிழ்கின்ற
புதிய ஆண்டு மண்ணில்
புதுமைகள் ஆயிரம் படைக்கட்டும்.
தமிழீழ மக்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.
யாழ். வணிகர் கழகம்
21, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.
(சி/10134)

வட கோவை
ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி
கோயில் - கோப்பாய்
## மகாசபை உறுப்புரிமை
# புதுப்பித்தலும் புதிய உறுப்புரிமையும்
மேற்படி கோயில் பரிபாலன சபையின் மகாசபை உறுப்புரிமை, யாப்பு விதிக்கு அமைவாக 1995 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்படவுள்ளது. 28—12—1994 ஆம் திகதிய பரிபாலன சபையின் கூட்டத் தீர்மானப்படி உறுப்பினர்கள் 01—01—1995 முதல் 31—03—1995 ஆம் திகதிக்குள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.
1. 1994 ஆம் ஆண்டு ரூபா நூற்றி இருபது (120/-) செலுத்தி உறுப்புரிமை பெற்றவர்கள் 1995 ஆம் ஆண்டு ரூபா அறுபது (60/-) செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.
2. 1995 ஆம் ஆண்டு புதிதாக உறுப்புரிமை பெற விருபுபயவர்கள் ரூபா நூற்றி இருபது (120/-) செலுத்தி விண்ணப்பம் வழங்கி உறுப்புரிமை பெறலாம்.
3. மகாசபையில் ஆயுட்கால உறுப்புரிமை பெறவிரும்புபவர்கள் ரூபா ஆயிரம் செலுத்தி (ரு. 1000/-) விண்ணப்பப் பத்திரம் வழங்கி உறுப்புரிமை பெற்றுக்கொள்ளலாம்.
4. ஏற்கனவே ஆயுட்கால உறுப்புரிமை பெற்றவர்கள் உறுப்புரிமையைப் புதுப்பிக்க வேண்டியதில்லை.
5. உபயகாரர்கள் உறுப்புரிமை விண்ணப்பத்தை வழங்கி சந்தாப் பணம் செலுத்தாமலே உறுப்புரிமை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: உறுப்புரிமையைப் புதுப்பிப்பவர்களும், புதிதாக உறுப்புரிமை பெற விரும்புபவர்களும் ஆலயக் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம் காரியாலயத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

த. தர்மராஜா — தலைவர்.
ஐ. சிவலோகநாதன் — செயலாளர்.
பரிபாலன சபை
(34470)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி கிருஷ்ணசாமி மகேஸ்வரி
மலர்வு: **21 – 09 – 1921**
உதிர்வு: **02 – 12 – 1994**

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணசாமி மகேஸ்வரி அவர்கள் கடந்த 02-12-94இல் சென்னையில் காலமானார் அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் காசிபுனித கங்கையில் 29-12-94இல் நடைபெற்றன.
வீட்டுக் கிரியைகள் (01-01-95)இன்று சென்னை திருவான்மையூரிலுள்ள அன்னாரின் மகன் இல்லத்தில்நடைபெறும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.
அன்னாரின் ஈமக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வல்வெட்டித் துறையிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு கடித மூலமும் நேரிலும் அனுதாபத்தை பகிர்ந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
—குடும்பத்தினர்.
வல்வெட்டித்துறை.
(சி/10120)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகளுக்கு சாதகமான முயற்சிகள் இடம்பெற்ற போதிலும்
# வரலாற்றில் பேரழிவுகள் பலவற்றைச் சந்தித்த ஆண்டு 1994

நேற்றுடன் முடிவடைந்த 1994ஆம் ஆண்டு சமாதான முயற்சிகளும், இரத்தக் களரிகளும் நிறைந்த ஆண்டு ஆகும்.

செசின்யாவிலும், பொஸ்னியாவிலும், றுவாண்டாவிலும் நடைபெற்ற சம்பவங்கள் — நடைபெற்றுவரும் சம்பவங்கள் மிகவும் மோசமான குழப்பம் நிறைந்த சம்பவங்களாகக் கருதப்படுகின்றன.

இச் செய்தி எழுதிக் கொண்டிருக்கும் போது செசின்யாவில் தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்றிருந்தன.

புதுவருடத்தை முன்னிட்டு யுத்த நிறுத்தம் செய்யும்படி செசின்ய பிரிவினைவாதத் தலைவர் டுடயேவ் ரஷயத் தலைவர் பொறிஸ் யெல்ட்ஸினிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதே நேரத்தில் பொஸ்னியாவில் புதுவருடத்துடன் நான்கு மாத போர்நிறுத்தம் ஒன்றுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு பொஸ்னிய சேர்பியர்களும், முஸ்லிம் அரச தரப்பினரும் தயாராகிக் கொண்டிருந்தனர்.

சமீபத்தில் நடந்த கர்நாடகம், ஆந்திரா உட்பட நான்கு மாநில சட்டசபைத் தேர்தல்களில் மூன்றில் காங்கிரஸ் தோற்றுவிட்டது.

நரசிம்மராவுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மூத்த அரசியல்வாதியும் மத்திய அமைச்சருமான அர்ஜுன்சிங் ராஜினாமா செய்துவிட்டார்.

பல கோடி பெறுமதியான சீனி இறக்குமதி மோசடியை அடுத்து ஏ. கே. அன்ரனி உட்பட மூன்று அமைச்சர்கள் பதவி இழந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நரசிம்மராவ் அரசை தொடர்ந்து அரசியல் சூன்யத்தை நோக்கித் தள்ளிச் செல்வதாக அவதானிகள் கருதுகின்றனர்.

நரசிம்மராவ் அரசின் பதவிக்காலம் 1996ஆம் ஆண்டில் முடிவடைகிறது. அதற்கிடையில் பெரும் சவால்களை அது எதிர்நோக்கப் போகிறது.

1996 பொதுத் தேர்தலுக்கு முன்னர் அண்ணா தி. மு. க. தெலுங்கு தேசம் உட்பட சகல பிராந்தியக் கட்சிகளும் இணைந்து பலம் வாய்ந்த எதிரணி ஒன்றை காங்கிரஸுக்கு எதிராக அமைக்க திட்டமிட்டு வருகின்றன.

## பாகிஸ்தான், பங்களாதேஷ் அரசியல் குழப்பத்தை நோக்கி நகருகின்றன

உலகில் கெடுபிடி யுத்தம் (Cold War) முடிவடைந்த 5 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

அமெரிக்காவை சர்வதேச பொலீஸ் நிலைக்கு உயர்த்திய புதிய உலக ஒழுங்கின் கீழ் (New World Order) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நம்பிக்கையை இழக்க வைப்பவையாக உள்ளன.

சர்வதேச அரங்கில் தீர்வுகளுக்கான அணுகு முறைகள் இடம்பெற்ற போதிலும் வரலாற்றில் பேரழிவுகளைச் சந்தித்த ஆண்டு 1994 தான்.

உலக நாடுகள் பார்த்திருக்க றுவாண்டாவில் 10 லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் சமாதானம் பற்றி பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால் தீர்வுகள் குறைவாகவே எட்டப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபை வரலாற்றில் என்றும் இல்லாதவாறு, 12 நாடுகளில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான படைகளை வைத்துக்கொண்டிருக்கிறது.

ஐ. நா. தலையிட்டுள்ள நாடுகளில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் நேட்டோவின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

ரஷ்யா, அமெரிக்காவுடன் வெளிப்படையாக முரண்பாடுகளைக் காட்ட ஆரம்பித்த ஆண்டும் கடந்த ஆண்டு தான்.

பொஸ்னியா, ஈராக், நேட்டோ விஸ்தரிப்பு சம்பந்தமாக அமெரிக்காவும், ரஷ்யாவும் கருத்து முரண்பாடு கொண்டுள்ளன.

அமெரிக்காவின் சில வெளிநாட்டுக் கொள்கைகள் மேற்கு நாடுகளில் அமெரிக்கத் தலைமைக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் அமைந்திருப்பது மற்றொரு அம்சம் ஆகும்.

மற்றும் அணுக்குண்டு உற்பத்திக்கு பயன்படும் யுறேனியம் கடத்தல் கண்டுபிடிப்பு, ஷுமேக்கர் லெவி என்ற வால் நட்சத்திரம் வியாழன் கிரகத்துடன் மோதியது இந்தியாவில் கொள்ளைநோய் ஆகியவையும் கடந்த ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களில் இடம் பெறுகின்றன.

ஜோர்தானின் மேற்குக் கரையில் உள்ள ஹெப்ரோனில் யூதர் ஒருவரால் 30க்கும் அதிகமான அராபியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது —

ஆர்ஜென்ரீனா கார் குண்டு வெடிப்பில் 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டது.

டெல் அவ் பயணிகள் பஸ் தகர்ப்பில் 22 பயணிகள் கொல்லப்பட்டது. 1970 வன்முறை அரசியலின் சாயலை நினைவுபடுத்துகிறது.

### இந்தியா

ஏற்கனவே நடந்து முடிந்த நான்கு மாநில சட்ட சபைத் தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரியில் நடக்கப் போகும் 5 மாநில சட்ட சபைத் தேர்தல்கள் பிரதமர் நரசிம்மராவின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்றன.

### பங்களாதேஷ்

பங்களாதேஷில் எதிர்க் கட்சிகளுக்கும் அரசாங்கக் கட்சிக்கும் இடையிலான பலப்பரீட்சையுடன் கடந்த ஆண்டு கழிந்துள்ளது.



பொனாஸிர் பூட்டோ

தற்போது பதவியில் இருக்கும் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் தலைவி காலெடா ஸியா [Khaleda-Zia) டதவியில் இருந்து விலக வேண்டும் என்றும்—

நடுநிலைமை வகிக்கக் கூடிய காபந்து அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டு உடனடியாக சுதந்திரமாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சியான அவாமிலீக் கோரி வருகிறது.

அவாமிலீக்தலைவி சேய்க் ஹசீனா [Sheikh Hasina] இதற்காக அரசாங்கத்துக்கு காலக் கெடுவும் விதித்திருந்தார். இந்த காலக்கெடு பயன் இல்லாது முடிவடைந்ததை அடுத்து பங்களாதேஷ் நாடாளுமன்றத்தின் அனைத்து 153 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்து விட்டனர்.

நாடாளுமன்றத்துக்குள் இருந்து போராட்டம் நடத்தியஎதிர்க்கட்சிகள் தற்போது தமது போராட்டத்தை வீதிக்கு வந்து வெளியேஆரம்பித்துள்ளன.



சதாம் ஹுசேய்ன்

எதிர்க்கட்சிகளின் பொது வேலை நிறுத்தத்தினால் பங்களாதேஷ் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

1991 தேர்தல் மூலம் பதவிக்கு வந்த காலெடாஸியாவின் பதவி காலம் பங்களாதேஷின் அரசமைப்பின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டிலேயே முடிவடைகிறது.

தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் பதவியில் இருந்து விலகி காபந்து அரசிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கத் தயார் என காலெடாஸியா தற்போது அறிவித்துள்ளார்.

ஆனால் பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் இதனை ஏற்க மறுத்து விட்டன.

### பாகிஸ்தான்

உப கண்டத்தில் அரசியல் நெருக்கடிகள் மலிந்த மற்றொரு நாடு பாகிஸ்தான்.

பாகிஸ்தான் உள்நாட்டு நெருக்கடியை மட்டும் அல்ல அண்டை நாடான இந்தியாவுடனும் தொடர்ந்து கெடுபிடி நிலையில் இருந்து வருகிறது.

பிரதமர் பெனாஸிர் பூட்டோ (Benazir Bhutto) 1993 ஒக்ரோபரில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தார்.

தேர்தலில் தோல்வி அடைந்த பிரதான எதிர்க்கட்சியான நவாஸ் ஷெரீப்பின் (Nawas Sharif) முஸ்லிம் லீக் கட்சி பெனாஸிர் அரசு பதவி விலக கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதி காலக்கெடு விதித்திருந்தது.

இது பயனற்றுப் போனதை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப் அரசுக்கு எதிரான தனது போராட்டத்தை தற்போது ஆரம்பித்துள்ளார்.

பெனாஸிர் பூட்டோவுக்கும் நவாஸ் ஷெரீப்புக்கும் இடையிலான அதிகாரப் போராட்டம் நீடிக்குமானால் இறுதியில் ராணுவத் தலையீட்டிலேயே இது முடிவடையலாம் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தான் அரசியலில் ராணுவம் தொடர்ந்து ஒரு சக்தியாக இருந்து வருகிறது.

### றுவாண்டா

ஆபிரிக்காவில் உள்ள கறுப்பின மக்கள் வாழும் சின்னஞ் சிறு நாடான றுவாண்டாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் 10 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

யுத்தத்துக்கு அஞ்சி அண்டை நாடான ஸயருக்கு அகதிகளாகச் சென்றவர்கள் மத்தியில் கொலாரா நோய் பரவியது. இதிலும் பல்லாயிரக் கணக்கானோர் பலியானார்கள்.

## சர்வதேச விவகாரங்களில் அமெரிக்க - ரஷ்ய முரண்பாடு அதிகரிப்பு

பெரும்பான்மை ஹுத்து (Hutu) இனத்தைச் சேர்ந்த றுவாண்டா ஜனாதிபதி யூவேனல் ஹாபிரியாமானாவும் (Juvenal Habyarimana) அதே இனத்தைச் சேர்ந்த புறூண்டி ஜனாதிபதி சிப்ரியனும் (Cyprien) தன்ஸானியாவில் நடைபெற்ற சமாதான மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு விமானத்தில் திரும்பிய சமயம் றுவாண்டாவின் சிறுபான்மைச் துட்சி (Tutsi) இனப் போராளிகளின் றொக்கெட் தாக்குதலுக்கு இவர்களது விமானம் இலக்காகி இருவருமே கொல்லப்பட்டனர்.

இதனை அடுத்து சினம் கொண்ட பெரும்பான்மை ஹுத்து இனத்தவர்களைக் கொண்ட ராணுவம் பழிவாங்கும் நோக்குடன் சிறுபான்மை துட்சி இனத்தவர்களைக் கொன்றழித்தது.

மூன்று மாத கால உள்நாட்டு யுத்தத்தின் பின் பெரும்பான்மை ஹுத்து இன ராணுவம் சிறுபான்மை துட்சி இன ராணுவத்திடம் தோல்வி கண்ட நிலையில்—

அதாவது பெரும்பான்மையினர் மீது சிறுபான்மையினர் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் றுவாண்டா அரசியல் இன்று இருந்து வருகிறது.

## நம்பிக்கையை இழக்க வைக்கும் "புதிய உலக ஒழுங்கு" முறை

### பொஸ்னியா

மூன்றரை ஆண்டுகளாக நடைபெற்று வரும் பொஸ்னிய யுத்தத்தில் கார்ட்டரின் சமாதான முயற்சியை அடுத்து புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

பொஸ்னியாவில் சண்டையில் ஈடுபட்டிருந்த பொஸ்னிய சேர்பியர்களும் முஸ்லிம் அரசபடையினரும் யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தி உள்ளனர்.



ஹெல்மெட் கோல்

நான்கு மாத யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவும் ஐந்து நாடுகள் சர்வதேச தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்தவும் பொஸ்னிய சேர்பியர்கள் இணங்கி உள்ளனர்.

ஏற்கனவே பொஸ்னிய சேர்பியர்களினால் நிராகரிக்கப்பட்ட இத்தீர்வுத் திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் பொஸ்னிய சேர்பியர்களை இணங்க வைக்கலாம்என்று கார்ட்டர் கருதுகிறார்.

இத்தீர்வுத்திட்டம் பொஸ்னிய சேர்பியர்களுக்கு 49சதவீத நிலமும் முஸ்லிம்களுக்கும் குறோசியர்களுக்கும் 51 சதவீதநிலமும் வழங்குகிறது.

சேர்பியர்கள் பொஸ்னியாவில் 70 சதவீத நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். அத்துடன் குறோசியாவில் நான்கில் ஒரு பங்கு பகுதி சேர்பியர்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது.

அகன்ற சேர்பிய நாடு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தத்தில் இதுவரை இரண்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டு விட்டனர். 10 லட்சம்மக்கள் வரை இடம் பெயர்ந்து விட்டனர்.



டுடயேவ்

### வட அயர்லாந்து

வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது பிரிட்டனுக்கும் ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிஷ் விடுதலை இராணுவத்துக்கும் இடையில் நடைபெற்று வருகின்றன.

கத்தோலிக்கர்களின் இயக்கமான ஐ. ஆர். ஏ. கடந்த ஒகஸ்ட்டில் இருந்து யுத்த நிறுத்தம் செய்து வருகிறது. புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் உல்ஸ்ரர் பாதுகாப்பு இயக்கம் ஒக்டோபர் தொடக்கம் யுத்த நிறுத்தம் செய்துள்ளது.

சஞ்சாரன்

வட அயர்லாந்து ஐரிஷ் குடியரசுடன் மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்று ஐ. ஆர். ஏ. கோருகிறது. பிரிட்டனுடன் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டும் என்று புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் கோருகிறார்கள்.

இரு தரப்புக்கும் இரகசிய வாக்குறுதிகளை அளித்து யுத்தநிறுத்தத்துக்கு இணங்க வைத்துள்ளது பிரிட்டன்.

இரு தரப்புக்கும் இடையில் சமரச தீர்வு ஒன்றை ஏற்படுத்துவது பிரிட்டனுக்கு இலேசான காரியம் அல்ல.

### ஹெய்ட்டி

மூன்று வருட கால இடைவெளிக்குப் பின்னர் ஹெய்ட்டியில் மீண்டும் ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1991 புரட்சியின் போது பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி ஜீன் — பேர்ட்ரண்ட் அரிஸ்ரைட் (Jean — Bertrand Aristide) கடந்த ஒக்ரோபர் மாதம் நாடு திரும்பினார்.

ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட இணக்கத்தின் பிரகாரம் இராணுவ ஆட்சியாளர் ராவல் செட்றாஸ், போர்ட் ஒப் பிரின்ஸ் பொலீஸ் அதிபர் ஜோஸப் மிக்ஹெல் பிராங்கொய்ஸ், செட்றாஸின் பிரதம உதவியாளர் பிலிப்பே பியாம்பி ஆகியோர் ஹெய்ட்டியை விட்டு வெளியேறி உள்ளனர்.

ஹெய்ட்டியில் அமெரிக்க ராணுவத் தலையீடு ஏற்பட இருந்த சமயம் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் ஹெய்ட்டிக்கு விஜயம் செய்து பெரும் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்த்திருந்தார்.

### மத்திய கிழக்கு

பி. எல். ஓ. எனப்படும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலமும்—

ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலமும் — 45 வருட கால மத்திய கிழக்குப் பிரச்சினையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பி. எல். ஓ. — இஸ்ரேல் ஒப்பந்தத்துக்காக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத், இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீன், இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் ஷிமொன் பெரெஸ் ஆகிய மூவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது.

மத்திய கிழக்கில் தற்போது இஸ்ரேலுடன் ஒப்பந்தம் செய்யாது எஞ்சி இருக்கும் நாடுகள் சிரியாவும் லெபனானுமே.

சிரியா ஜனாதிபதி ஹபேஸ் அல் அஸாத்தையும் இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீனையும் ஒப்பந்தம் ஒன்றுக்குள் இட்டுச் செல்ல அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை போதிய பலன் அளிக்கவில்லை.

1967 யுத்தத்தில் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட கோலான் குன்றுப் பிரதேசத்தில் இருந்து இஸ்ரேல் படைகள் ஒரே தடவையில் வாபஸாக வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் இருந்து சிரியா இன்னும் பின்வாங்கியதாகத் தெரியவில்லை.

எகிப்தின் அலெக்ஸ் சாந்திரியா நகரில் சிரியா ஜனாதிபதி ஹபேஸ் அல் அஸாத், சவூதி அரேபிய மன்னர் ஹெத் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் ஆகிய மூவரும் கடந்த வாரம் நடத்திய மினி உச்சி மாநாட்டில் சிரியாவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டிருப்பது மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானம் உடனடியாக ஏற்படும் வாய்ப்பைக் குறைத்துள்ளது.

### செசின்யா

1979 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானுக்குள் அப்போதைய சோவியத் யூனியன் தனது படைகளை அனுப்பிய பின்னர் மிகப் பெரும் ராணுவ நடவடிக்கையாக செசின்யா மீதான படை எடுப்புக் கருதப்படுகிறது.

ரஷ்யாவின் தென் பகுதியில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட சென்சியா 1991 ஆம் ஆண்டு தன்னை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்திருந்தது.

செசின்யாவின் கிளர்ச்சியை நசுக்கா விட்டால் ககாக்சஸ் (Caucasus) மலைப் பிராந்தியத்தில் உள்ள தனது ஏனைய குடியரசுகளையும் இழக்க நேரிடலாம் என்று ரஷ்யா கருதுகிறது. படையெடுப்புக்கான உடனடிக் காரணமும் இது தான். புதுவருட தினத்தை முன்னிட்டு யுத்த நிறுத்தம் செய்யும் படியும் நிபந்தனை அற்ற பேச்சுக்களை ஆரம்பிக்கும் படியும் செசின்ய பிரிவினை வாதத் தலைவர் டுடயேவ் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்



பில்கிளின்ரன்

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றாலும் செசின்யர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை ரஷ்ய அரசாங்கம் கைவிடும் வரை சமரசத்துக்கான சாத்தியம் குறைவாகவே இருந்து வருகிறது

மலைப் பிரதேசம் சூழ்ந்த செசின்யாவில் ரஷ்யப் படைகளால் கெரில்லாத் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாது.

செசின்யாவை முற்றாகக் கைப்பற்றினாலும் தனது படைகளை வைத்து அதனை நிர்வகிக்க ரஷ்ய அரசுக்கு பெரும் நிதிச் செலவும் ஏற்படும்.

### யேமன்

யேமனை (yeman) மீண்டும் இரு நாடுகளாகத் துண்டாடும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. யேமனின் தென் பகுதி வடக்கில் இருந்து பிரிந்து தனி நாடாகச் சுதந்திரப் பிரகடனம் செய்திருந்தது.



நவாஸ் ஷெரீப்

இரண்டு மாத காலச் சண்டையின் பின்னர் வட பகுதிப் படைகள் தென் பகுதியைக் கைப்பற்றி யேமன் பிரிவினைக்கு முடிவு கட்டின.

### ஜேர்மனி

ஜேர்மனியில் நடைபெற்ற தேர்தலில் சான்செலர் ஹெல்மட் கோல் நான்காவது தடவையாக மேலும் நான்கு வருட காலத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பேர்லினில் இருந்து கடந்த செப்ரெம்பர் மாதம் கடைசி நேச நாட்டுப் படைகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

பொருளாதாரத் துறையில் மிகவும் நலிந்து போன கிழக்கு ஜேர்மனியையும் இணைத்துக் கொண்டது ஒன்றுபட்ட ஜேர்மனி துரிதமாக அபிவிருத்தி அடைவதற்கு தடைக் கல்லாக இருந்து வருகிறது.

### சீனா

உலகில் எஞ்சி உள்ள கம்யூனிஸ்ட் நாடுகளில் ஒன்றான சீனா முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் மூலம் துரித வளர்ச்சி கண்டு வருகிறது.

90 வயது நிரம்பிய சீனத் தலைவர் டெங்சியாஒபிங் (Deng xia oping) சீனா அரசியலில் தொடர்ந்து சக்தி வாய்ந்த தலைவராகக் கருதப்பட்டு வருகிறார் 1997ஆம் ஆண்டில் ஹொங்ஹொங் பிரிட்டனிடமிருந்து சீனாவுக்கு கைமாற உள்ளது.

## வடகொரியா, ஹெய்ட்டி பொஸ்னியாவில் கார்ட்டர் நிகழ்த்திய சாதனைகள்

### ஈராக்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்ன் தனது துருப்புக்களை குவைத்துடனான எல்லைக்கு திடீரென நகர்த்தியது மூலம் சர்வதேச அரங்கில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி இருந்தார்.

எனினும் அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் மிரட்டல்களை அடுத்து சில நாட்களின் பின் ஈராக் தனது படைகளை குவைத் எல்லையில் இருந்து விலக்கிக் கொண்டது.

1991 வளைகுடா யுத்தத்தின் போது ஐ. நா. பாதுகாப்புச்சபை ஈராக் மீது தடைகளை (Sanctions) அறிவித்திருந்தது.

இந்தத் தடைகள் இன்னும் இருந்துவருகின்றன நீக்கப்படவில்லை.

இந்தத் தடைகளை நீக்குவது குறித்து எந்த ஒருநாடாவாது அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

இத்தடைகள் காரணமாக ஈராக்கின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது.

இப்படியான ஓர் இக்கட்டான நிலையிலேயே ஈராக் தனது படைகளை குவைத் எல்லைக்கு நகர்த்தி சர்வதேச கவனத்தை ஈர்க்க முயன்றது

## உலக நாடுகள் பார்த்திருக்க றுவாண்டாவில் 10 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்

தற்போது ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிபந்தனைகளில் ஒன்றான குவைத்தின் எல்லைகளை அங்கீகரிக்கும் கோரிக்கையை ஈராக் ஏற்றுக் கொண்டுவிட்டது. ஈராக் நாடாளுமன்றத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டுவிட்டது.

ஆனால் 1991 வளைகுடா யுத்தத்தின் போது குவைத்துக்கு ஏற்பட்ட இழப்புக்கு நட்ட ஈடுவழங்க ஈராக் இன்னும் பின்னடித்து வருகிறது. இதனையும் நிறைவேற்றினாலன்றி ஈராக்கின் உடனடிப் பிரச்சினைகள் தீர்ந்து போவதற்கில்லை.

### மொஸாம்பிக்

அங்கோலாவைப் போன்று மொஸாம்பிக்கும் ஒரு போர்த்துக்கேய குடியேற்றநாடு.

1975ஆம் ஆண்டு போர்த்துக்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து மொஸாம்பிக்கில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வந்தது.

1975இல் ஆட்சியைக் கைப்பற்றிய மார்க்சிஸ சார்பு பிறிலிமோ இயக்கத் தலைவர் ஜோக்கிம் சிசனோவாவின் (Joukim Chissanoa) ஆட்சிக்கு எதிராக வலதுசாரி றெனாமோ இயக்கம் போராட்டம் நடத்தி வந்தது.

நீண்டகால சமாதான முயற்சிகளின் பின்னர் பிறிலிமோ இயக்கத் தலைவரும் மொஸாம்பிக் ஜனாதிபதியுமான ஜோக்கிம் சிசனோவாவுக்கும் றெனாமோ இயக்கத் தலைவரான அபோன்சோ

[ 5ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள (A. J. 2-90) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (34437)

யாழ்ப்பாணம், கந்தர்மடச் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் வீட்டுக்கான அத்திவாரத்துடன் ஒரு பரப்பு காணி விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: ச. தியாகராசா, இல. 144, அரசடி வீதி, கந்தர்மடம். [34424]

புத்தாண்டை முன்னிட்டு இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 392, பிரதான வீதி(பஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (34457)

உங்களுக்குத் தேவையான இதரை, கதலி வாழைக் குட்டி எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். ராஜா மில், தாவடி. (8171)

African Love Birds ஆபிரிக்க லவ் பேர்ட்ஸ், வெள்ளை சடைமுயல் குட்டிகள் 4 பக்க கண்ணாடி மீன் தொட்டி உடன் விற்பனைக்குண்டு. 2 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். [8166]

லம்பிரட்டா ஸ்கூட்டர், வாட்டர்பம் ஜெனரேட்டர் தொடர்பு முகவரி: இல. 5, சைமன் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் [லைடன் அருகில்]. [34445]

### விற்பனையாகிறது

புதிய விஞ்ஞானம் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி ஆண்டு 6, 7, 8, 9, 10, 11, 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான தமிழ் மொழி, கணிதம், இன்பத்தமிழ்க் கட்டுரை வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8169]

### சிவம்ஸ் கலண்டர்

இரகுநாதையர் பஞ்சாங்கப்படி கணித்து வெளிவந்துள்ளது சிவம் கலண்டர். விலை குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றது. அப்பியாசக் கொப்பிகள் தாராளமாகக் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீ காந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-47)

### கலண்டர்கள்

சகல விடுமுறை நாட்களும் [தமிழீழம் உட்பட] அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் சிலிப் வகைகள் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம், பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (34367)

### டயறி கலண்டர்

உங்களுக்கு தேவையான எல்லா அளவுகளிலும் டயறி வகைகள், கலண்டர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-85]

### நாட் குறிப்பேடு

நகை மாளிகை மற்றும் வர்த்தக பிரமுகர்களுக்கும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் புத்தாண்டு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு மிகச் சிறப்பான பெரிய நாட்குறிப்பேடு (டயறி) விலை ரூபா 65/- மட்டும். மற்றும் திருமண அழைப்பிதழ் பத்திரங்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம் (சி-10111)

### இறைச்சிக்கோழிகள்

Broiler இறைச்சிக்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: "சிவகாமி வாசம்", சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு. [34385]

### கோழிக்குஞ்சு

Christhomdu புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. குலசிங்கம், 9, றக்கா வீதி(Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். [34459]

### இறைச்சிக் கோழி

எல்லா வகையான இறைச்சிக் கோழிகளும், காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34440)

### காணி விற்பனைக்கு

பரந்தன் 5ஆம் வாய்க்காலில் தென்னை, பனை, மா மரங்களுடன் கூடிய போக்குவரத்து வசதியுடனான பத்து ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. T. சண்முகலிங்கம், இல. 48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [34350]

### ஜோதிட விஞ்ஞானம்

1995 புத்தாண்டுப் பலன்களும் 3-1-95 முதல் செவ்வாய் வக்கிரமும் எல்லா ராசிப் பலன்கள் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். (நூலாசிரியர் - சத்யா) பாடசாலை அலுவலக உபகரணங்களுக்கு மது பொத்தகசாலை, கொக்குவில் சந்தி. (7845)

### G. A. Q. — B. A.

தமிழ் இலக்கணம் வினா-விடை, பத்மாவதி சரிதம்- அ. மாதவ ஐயர், சிலப்பதிகாரம் - கானல்வரி தடலாடு காதை.பாடலும்விளக்கவுரையும் புறநானூறு 1 முதல் 20 வரை. அகநானூறு, கண்ணப்பநாயனார் புராணம் வெளியீடு: உயர் கல்வி நிறுவனம். விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-87]

### மணமக்கள் தேவை

34 வயது, பட்டதாரி ஆசிரியருக்கு A/L மணப்பெண்ணும், 30 வயது, பட்டதாரிக்கு ஆசிரியையும், 33 வயது, எலெக்ரீசனுக்கு சைவ மணப்பெண்ணும் தேவை. இன்னும் பல மணமக்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு: கடிதமூலம்/நேரில், சுவாமியார், இல. 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [34425]

### மணமகன் தேவை

யாழ். இந்து, க. பொ. த. (உயர்) சித்தி அடைந்த, வயது 33, உயரம் 5' 7", கேட்டை நட்சத்திரம், செவ்வாய் 2, அழகிய வெள்ளை நிறப் பெண்ணுக்கு உத்தியோகம், தனியார்துறை, வெளிநாடு விரும்பத்தகுந்தது. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். இல. 741, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [34380]

### மணமகள் தேவை

29 வயது, கத்தோலிக்க மதம், வியாபார ஸ்தாபனத்தில் காசாளராகக் கடமையாற்றும், குடிப்பழக்கமற்ற, நற்பண்புகளுள்ள மகனுக்கு தாயார் மணமகளைத் தேடுகின்றார். இந்து மதத்தவரும் ஏற்றுக் கொள்ளப்படுவர். இல. 743, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34433)

### புத்தகம் தேவை

பெரிய புராணம் C. K. சுப்பிரமணிய முதலியார் விரிவுரையுடன் 6 முழுப் பாகங்களும் அல்லது தனித் தனியாக விற்க விரும்புவோர் தொடர்பு: இல. 742, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [34392]

---

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

"விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்"



## எரிக் கணேஷ்

(கண் கண்ணாடியகம்)

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-91]

---

யே. ம. சு. துணை

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 23 — 10 — 1967



இறைவன் அணைப்பில்: 03 — 12 — 1994

கிறிஸ்துவின் சமாதானத்தில் இளைப்பாறிய

### பி. லீமாறோஸ் மலர்

எம் அன்பு உள்ளமே! நீங்கள் 27 வருடங்கள் எம்முடனே இவ்வுலகில் வாழ்ந்தீர்கள். இப்போது எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் ஆகிவிட்டன.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள்.

மணல் ஒழுங்கை,
பருத்தித்துறை.

இவரின் ஆன்ம சாந்திக்காக பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் நாளை (02-01-95) திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

---

ஆசிரியர், மாணவர்களுக்கு
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

## "A" LEVEL CENTRE

1st LANE POINT - PEDRO ROAD, JAFFNA.

★ சிங்கள வகுப்பு ★

ஆரம்பம்: 07 - 01 - 1995

Sat. & Sun. 8-00 – 9-00 a. m.

ஆசிரியர்: MISS A. ALISTA

குறிப்பு:
மாணவரின் வருகைக்கேற்ப நேரங்கள் மாற்றி அமைக்கப்படும். [சி-48]

---

புத்தாண்டு வாழ்த்துக்களை
★ எமது வாடிக்கையாளர்களுக்கும்
மற்றும்
★ அன்பர்கள்
★ நண்பர்கள்
அனைவருக்கும் இந்நன்னாளில்
தெரிவித்து மகிழ்கிறோம்!

## ஜெயா அழகுமாடம்

(மொத்த உதிரி விற்பனை நிலையங்கள்)
187, 177A மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். [சி-62]

---

★ வாடிக்கையாளர்கள்
★ அன்பர்கள்
★ நண்பர்கள் மற்றும்
★ தமிழீழ மக்கள் அனைவருக்கும்

எமது புத்தாண்டு
நல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்!

## ராஜா ஸ்ரோர்ஸ்

67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [சி-63]

---

இன்று மலரும் புத்தாண்டில்
தமிழீழ மக்கள் சுபிட்சம் அடைந்து
இன்புற்று வாழ வாழ்த்துகிறோம்!

★ வைத்திய நிபுணர்கள் வழங்கும் சிட்டைக்கு அமைய சரியான கண்ணாடிகளை வழங்குபவர்,



## S·M·FERNANDO

580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்),
யாழ்ப்பாணம். (சி-64)

---

★ எமது வாடிக்கையாளர்கள்
★ விற்பனையாளர்கள்
— அனைவருக்கும் —

புதுவருட நல்வாழ்த்துக்கள்




தரமென்றாலும்
அண்ணா!
சுவையென்றாலும்
அண்ணா!!
★ தயாரிப்புகளே ★

ஆம்! சுவையான இல்லத் தேவைகளுக்கு இவை யாவும் வேண்டும்.

★ அண்ணா தயாரிப்புகளான
★ இலகு தோசை மா
★ இலகு இட்லி மா
★ இலகு அப்பம் மா

குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் போஷாக்கிற்கும்

ஜீவாகாரம்

## அண்ணா தொழிலகம்

இணுவில். [சி-70]

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க

## இந்து சமய அபிவிருத்திச் சபை

சுன்னாகம்.

★ புத்தாண்டு வாழ்த்துக்கள் ★ [8173]

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

பிரிவு: III

ஆண்டு 9, 10, 11
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 03 - 01 - 1995

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — இந்திரன் |
| தமிழ் | — பண்டிதர் N. S. மணியம் |
| ஆங்கிலம் | — மகாலிங்கம் |
| சமூகக்கல்வி | — வேலா |
| வர்த்தகம் | — நாதன் |

★ அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.
★ அலகு ரீதியான பரீட்சைகள் நடைபெறும். (சி-58)

---

## கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.
வெலிங்டன் சந்திக்கருகில்,
யாழ்ப்பாணம்.


A/L 94
பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
பகல் நேர
★ பிரத்தியேக பொருளியல் வகுப்புக்கள்
பொருளியல்: திரு. உதயன்

பிரிவு- I திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி (காலை 8—10)
இப்பிரிவுக்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுவிட்டன.
பிரிவு- II
ஆரம்பம்: 03 — 01 — 1995

★ மீட்டல் வகுப்புக்கள் நடைபெறும்
★ கிழமையில் 8 மணித்தியால வகுப்பு பயிற்சிகளுடன் மீட்கப்படும்.
★ குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். [சி-82]

---

## அன்புள்ள அப்பாவுக்கு!



### அமரர் மாணிக்கம் அப்புத்துரை

(ஓய்வுபெற்ற நெற்களஞ்சியப் பொறுப்பாளர்)

திதி: 01 — 01 — 1995

தோற்றம்: 22 — 07 — 1924
மறைவு: 11 — 01 — 1994

அள்ளி விளையாடி
அமுதமொழி பேசி,
அன்பாய் வளர்த்த அப்பா!
ஆண்டொன்று போனாலும்
அகலுமோ அந்தப் பாசம்.

தங்கள் பிரிவால் வாடும்;
மனைவியும், மக்களும்,
மருமக்களும், பேரப்பிள்ளைகளும்,

"வசந்தி பவனம்",
நெட்டிலிப்பாய், கோண்டாவில். (34426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கதவடைப்பு ஏனோ?

வானொலிவிய ''கட்-அவுட்டுகள்'', ''பானர்கள்'' என்ற சுய விளம்பரங்கள் மூலம் தமிழக மக்களை ஏமாற்றி வந்த செல்வி ஜெயலலிதா, உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்ற பெயரில் இப்போது உலகத் தமிழர்கள் அனைவரினதும் காதுகளிலும் பூச்சுற்ற முனைந்திருக்கிறார்.

தனிநாயக அடிகள் போன்ற தமிழ் வளர்த்த ஈழ அறிஞர்கள் உள்ளிட்ட பெரியோர்களால் கால்கோள் இடப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் அதன் தொடரும் இன்று ஜெயலலிதா போன்ற மாயைகளிடம்— மாயமான்களிடம் — போய்ச் சிக்கியிருக்கின்றன.

திருத்தலப் பெருமைமிக்க தஞ்சைப் பூமியிலே ஜெயலலிதாம்பிகையும் அவரது பூசாரிகள் கூட்டமும் நடத்தும் ஐந்து நாள் திருவிழாவின்— இந்தியப் பணத்தில் ஐம்பது கோடி ரூபாவுக்கும் அதிகமான செலவில் — நடத்தப்படும் கேளிக்கை களியாட்ட விழாவின்— தொடக்க நாள் இன்றாகும்.

செந்தமிழ் இன்று செழிப்புற்று ஓங்கி நிற்கும் நாடுகள் இரண்டு.

ஒன்று — தமிழகம்.

மற்றையது — தமிழீழம்.

தமிழீழத்துடன் ஒப்பிடும் போது தமிழகம் விஸ்தீரணத்தில் — பூகோளப் பரப்பளவில் பெரியது; தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் கூட, தமிழகம் பல லட்சம் அதிக தமிழரைக் கொண்டது.

ஆனால் சுந்தரத் தமிழின் சீர்த்தி ஓங்கி நிற்பதிலே தமிழீழம் தமிழகத்துக்குச் சளைத்தது அல்ல.

தமக்கென ஒரு தேசியத்தை—தமிழரின் வீரத்தையும் தவித்துவத்தையும்— இன்று உலகில் அழுத்தமாகப் பதித்துநிற்கும் உயர்ந்த ஒரு மறத் தமிழ்க் கூட்டத்தை— அப்படி ஒதுக்கிவிட்டு ''தமிழாராய்ச்சி மாநாடு''(?) ஒன்றை இன்று ஆரம்பிக்கிறது தமிழக அரசு ஏற்பாட்டிலான அமைப்புக் குழு.

தொன்மையான தமிழ் பேசும் பூமியான யாழ்ப்பாணத்திலிருந்து செல்ல முயன்றோருக்கு— வடக்கு-கிழக்கு மாகாண அரசின் பிரதிநிதிகளாக கிழக்கு மாகாணத்திலிருந்து செல்ல முயற்சித்தோருக்கு— இலங்கையில் ஏனைய பகுதிகளிலிருந்து பங்குபற்ற விரும்பிய தமிழில் புலமை பெற்ற பெரியோர்களுக்கு — உலக(?) தமிழராய்ச்சி மாநாட்டில் பார்வையாளர்களாகப் பங்குபற்றக் கூட அனுமதியில்லை; ஏன் அவர்கள் அவ்வேளை தமிழகத்தில் காலடி எடுத்து வைக்கவே கதவடைப்பு.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கைக் கிளைத் தலைவருக்குக்கூட மாநாட்டில் பங்குபற்ற அழைப்பில்லை; அனுமதி இல்லை. ஸ்ரீலங்கா அரசுக்கும் கூட உத்தியோகபூர்வ அழைப்பில்லை.

உலகத் தமிழருக்கான இந்த மாநாட்டில் — அந்த மாநாட்டுத் தொடரில் ஒன்றை நேர்த்தியாக நடத்திக் காட்டிய — நமக்கு ஏன் இந்த கௌரவம்?

நாம் ஈழத் தமிழர் என்பதைத் தவிர வேறில்லை.

ஈழத் தமிழர் என்ற காரணத்துக்காக எமது சமூகத்தையே — ஈழத் தமிழ் இனத்தையே புறம் தள்ளி, நிராகரித்து, ஒதுக்கி, அகௌரவப்படுத்தி விட்டு நடத்தப்படும் இந்த மாநாட்டை மானமுள்ள ஈழத் தமிழன் எவனும் ஏற்பானா?

இல்லை; அடியோடு நிராகரித்து, அதனை ஆவேசத்தோடு எதிர்ப்பான். அது தான் சரி.

ஆனால் ஈழத் தமிழரைக் கேவலப்படுத்தும் இந்த மாநாட்டை சுயலாபத்துக்காகப் பயன்படுத்தும் புல்லுருவிகளும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை.

மாற்று வழிகள் மூலம் மாநாட்டுக்குள் நுழைந்து, அங்கு ஆராய்வுக் கட்டுரைகளை வாசிக்க முயன்றிருக்கின்றனர் நம்மத்தியிலிருக்கும் சிலர் ஈழத்தமிழர் என்ற வகையில் மாநாட்டை பகிஷ்கரித்திருக்க வேண்டிய இவர்களால் எல்லோருக்கும் அவமானமே!

# கேளிக்கை விழாக்களால் தமிழ்மொழி வளர முடியாது; எதிர்காலத் தேவைகள் குறித்த ஆராய்ச்சி தேவை

## தமிழாராய்ச்சி மாநாடு குறித்து டாக்டர் 'நந்தி' பேட்டி

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்ற பெயரில் தமிழ் நாடு, திருச்சி மாவட்டத்தில் உள்ள தஞ்சாவூரில் நடைபெற விருப்பது உலகரீதியானதும் அல்ல; தமிழாராய்ச்சியும் அல்ல; மாநாடும் அல்ல. ஆகக்கூடினால், அது வெறும் கேளிக்கை விழாவேயாகும்.

பேராசிரியர் சிவஞான சுந்தரம் (நந்தி) இவ்வாறு கூறினார்.

தஞ்சாவூரில் இன்று முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை நடைபெறும் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றி ''உதயனு''க்கு அளித்த சிறப்புப் பேட்டியின் போது அவர் இவ்வாறு கருத்துரைத்தார்.

இத்தகைய மாநாடுகளினால் தமிழருக்கு நன்மை எதுவும் ஏற்பட்டு விடாது; தீமையே விளையும் என்று அவர் ஆணித்தரமாகக் கூறினார்.

எம்மவர் உட்படத் தமிழ் அறிஞர்கள் என்போர் இரண்டு மூன்று நாட்களில் அந்தப் புத்தகத்தையும் இந்தப் புத்தகத்தையும் பார்த்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்ற பெயரில் எழுதுவது தமிழ் மொழி வளர்ச்சிக்குத் துணை புரியுமா? என்று டாக்டர் நந்தி கேள்வி எழுப்பினார்.

கடந்தகாலம் முதல் இன்று வரை ஒன்றும் நீங்கல் இல்லாமல் சகல உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் சீரிய . திட்டம் இன்றியே நடைபெற்றுள்ளன.

தற்பொழுது உலக சுகாதார ஸ்தாபனத்தின் மருத்துவ சேவை ஆராய்ச்சி ஆலோசகராகப் பணிபுரியும் பேராசிரியர் டாக்டர் சிவஞானசுந்தரம் அண்மையில் மொங்கோலியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளார்.

இந்த நாடுகளில் தாம் பெற்ற அனுபவத்தையும் இணைத்து தமிழாராய்ச்சி மாநாடு பற்றித் தமது சிந்தனைகளை அவர் விவரமாக எடுத்துக் கூறினார்.

இந்திய தமிழ்ச் சஞ்சிகையான 'குமுதம்' அதன் 15-12-1994 இதழில் மாநாடு பற்றிய அவருடைய கருத்துகளைச் சுருக்கமாக வெளியிட்டிருந்தது.

டாக்டர் ''நந்தி'' எமக்களித்த பேட்டியின் சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

### எமக்குத் தேவையான ஆராய்ச்சி

ஆராய்ச்சி இரண்டு வகைப்படும்:

ஒன்று— தொன்மை இலக்கியங்கள், கல்வெட்டுகள் முதலியவற்றையும் கடந்த கால இலக்கியம், இலக்கணம் முதலியவற்றையும் ஆராய்தல்.

மற்றது— ஒரு மொழியின் தற்போதைய பல்வேறு பிரச்சினைகளை ஆராய்தல்.

தமிழ் ஒரு வளரும் மொழி; வழங்கு மொழி. அதன் நிகழ்கால எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆராய்ச்சியே அவசியமானது.

தமிழாராய்ச்சி மாநாடுகளில— கடந்த 7 மாநாடுகளிலும்— இந்த இரண்டாவது ஆராய்ச்சி நடைபெறவில்லை. இப்பொழுதைய மாநாட்டிலும் நிச்சயமாக நடைபெறாது.

### தமிழ் மொழியின் பின்தங்கிய நிலைமை

ஆங்கிலம், சீனம், ஜப்பான் போன்ற மொழிகளுடன் ஒப்பிடும் போது தமிழ் மொழி மிகவும் பின்தங்கியதாக இருக்கிறது.

தமிழ்ப் பேச்சு மொழி கொச்சைப் படுத்தப்பட்டுள்ளது; பல்வேறு பகுதிகளிலும் ஒரு தமிழர் பேசுவதை இன்னொரு தமிழர் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு வேறுபாடானதாக அமைந்துள்ளது;

உச்சரிப்பிலும் வித்தியாசம் இருக்கிறது. தமிழர்களே ஒருவருக்கொருவர் பேசும் போது அந்நிய மொழி போல் இருக்கிறது.

தமிழில் ஒரு அழகான அறிவு பூர்வமான உரையாடல் நடத்த முடியாதளவிற்கு அது கீழ் மட்டத்தில் உள்ளது.

இதற்கு ஒரு காரணம், படித்தவர்கள் உயர்மட்ட



உரையாடல் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது ஆகும். அவர்கள் இதனால் தமிழ் மொழியின் தரத்தைத் திட்டமிட்டு உயர்த்துவதில் கவனம் செலுத்தவில்லை.

நான் சென்று பார்த்த மொங்கோலியா, வட கொரியா போன்ற நாடுகளில் உயர் மட்ட வைத்தியர்கள், பொறியியலாளர்கள் போன்ற தொழில்சார் நிபுணர்கள் ஒரு பிறமொழிச் சொல் கூடக் கலக்காமல் தமது சொந்த மொழிகளில் பேசுகிறார்கள்.

வங்காள தேசத்துப் படித்தவர்கள் ஆங்கிலம் கலக்காமல் மிக சகஜமாகத் தமது மொழியில் உரையாடுகிறார்கள்.

### சிங்கள மொழியின் வளர்ச்சி

படித்த சிங்களவர்கள் தமது மொழியிலேயே தமது கருத்துகளை அழகாக வெளியிடுகின்றார்கள்.

சிங்களமொழி தமிழ் மொழியிலும் பார்க்க சகல துறைகளிலும் வளர்ந்துள்ளது. இதற்குக் காரணம் சிங்கள மக்கள் தமது அன்றாட வாழ்வில் சிங்கள மொழியை கரிசனையுடன் உபயோகிக்கிறார்கள். எந்த மொழியும் திட்டமிட்டு வளர்க்கப்பட வேண்டும். தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கு அல்ல. வளர்க்கப்படாவிடின் தமிழ் மொழி மெல்லச் சாகும் ஆபத்து உண்டு.

தமிழாராய்ச்சி மாநாடுகள் திட்டமிட்டு மொழியை வளர்க்கும் இத்தகைய பணியை ஆற்ற வேண்டும்.

உலகத் தமிழ் மொழியை இயன்றளவு ஒருங்கிணைக்கும் பாரிய வேலை எம்மைக் காத்திருக்கிறது.

கருத்துப் பரிமாறலுக்கு சொற்களை இசைவுபடுத்த வேண்டும்.

இந்தப் பணியை இந்திய இலங்கைத் தமிழ் நிபுணர் குழு தான் செய்ய முடியும்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் செலவுக்கெனத் தமிழ் நாடு அரசு 51 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதில் ஒரு கோடி ரூபாவை இத்தகைய பணிக்கு ஒதுக்கினால் போதுமே!

ஒன்றுபட்ட அகில உலக தமிழ் ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று இல்லாத பட்சத்தில் இம்மாநாடு இத்தகைய பணிகளில் ஈடுபட முடியும்.

தமிழ் மொழி இன்னமும் ஒரு மேசைப் பேச்சு மொழியாக, இலக்கியப் பேச்சு மொழியாக மட்டும் இருக்கும் நிலை மாற வேண்டும். அது ஓர் அறிவியல் மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் மாற்றப்பட வேண்டும்.

வசன இலக்கியத்தில் ஆங்கிலத்துடன் ஒப்பிடும் போது தமிழ் எழுத்தாளரின் மொழி வளம் குறைவானதாகவே இருக்கின்றது. அவர்களுடைய எழுத்து காத்திரமற்றதாக உள்ளது.

### விடுதலைப் புலிகளின் சேவை

நிர்வாக மொழியாகத் தமிழை வளர்க்கும் விஷயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழுக்குச் செய்துள்ள சேவை பாராட்டப்பட வேண்டியது ஒன்றாகும். நிர்வாக மொழியாகத் தமிழை அவர்கள் திறம்படப் பாவிக்கிறார்கள். அவர்கள் பண்பான, அழகான தமிழில் அச்சொட்டாக எழுதுகின்றார்கள்.

உலகில் தமிழ் வாழப் போகும் இடங்கள் இந்தியாவும் இலங்கையும் தான். ஆகவே தமிழ் மொழியின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தில் இரண்டு நாட்டு அறிஞர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

### எச்சரிக்கை தேவை

ஆனால் தற்பொழுது இந்த இணைப்புக்கு தஞ்சா

பேட்டி கண்டவர்:
**பாரதிநேசன்**

வூர் தமிழ் மாநாடு பாதக நிலைமையை ஏற்படுத்துகிறது.

போட்டித் தொழிற்சங்கங்கள் போல, போட்டி மாநாடுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. மாநாடு என்ற கேளிக்கையில் கூடத் தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்க முடியாதவர்கள் ஆகியுள்ளனர்.

இந்தப் பிளவு வளர்ந்து பெரும் மோதல்களும் உயிர் ஆபத்துகளும் கூட ஏற்படும் நிலைமை உருவாகலாம். — இவ்வாறு பேராசிரியர் ''நந்தி'' தமது பேட்டியில் எச்சரிக்கைக் குரல் எழுப்பினார். ★

## தஞ்சை மாநாடு பற்றிய குமுதத்தின் கேள்விகள்

குமுதம் அதன் 17-11-1994 இதழில் தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றி எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் சில கேள்விகளை எழுப்பியுள்ளது. அவையாவன;

★ இது ஓர் அரசியல் மாநாடாக ஆகிவிடாமல், தனிநபர் துதி ஏதும் இல்லாமல் கவனம் எல்லாம் திசை திருப்பப்படாமல் தமிழ்மொழி மீது மட்டும் இருக்குமா? மாநாட்டின் முடிவில் தமிழ்மொழியைப் பற்றிய சிந்தனை மட்டும் நினைவில் நிற்குமா?

★ வேண்டியவர், வேண்டாதவர் என்கிற பாகுபாடு இன்றி, உண்மையான தமிழறிஞர்கள், திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் வரவழைக்கப்படுவார்களா? இல்லை கட்சி ஜால்ராக்கள் தான் தமிழறிஞராக மாறுவேடம் புனைந்து ஊடாடப் போகிறார்களா?

★ எதிர்வரப் போகும் விஞ்ஞான யுகத்தின் தேவைக்கு ஏற்ப தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இந்த மாநாடு ஒரு நல்ல களத்தை ஏற்படுத்தித் தருமா? தமிழுக்கு இந்த மாநாட்டின் மூலம் ஒரு புத்துணர்ச்சி ஊட்டப்படுமா?

# தீர்வுகளுக்குச் சாதகமான....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டலக்காமாவுக்கும் (Afonso Dhlakama) இடையில் 1992 ஆம் ஆண்டில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன் அடிப்படையில் கடந்த ஒக்ரோபர் மாதம் மொஸாம்பிக்கில் முதல் தடவையாக சுதந்திர பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது.

இத்தேர்தலில் முன்பு அங்கோலாவில் நடந்தது போன்று ஆட்சியில் இருந்த ஜனாதிபதியின் கட்சியே (பிறிலிமோ) வெற்றி பெற்றது.

தோல்வி அடைந்த றெனாமோ இயக்கம் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு மதிப்பளித்து எதிர்க்கட்சியாக இருந்து செயற்படப்போவதாக அறிவித்துள்ளது.

எனினும் றெனாமோ இயக்கம் அடிக்கடி நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருவதும்— அரசுடன் ஒத்துழைக்க மறுப்பதும்— நல்ல அறிகுறிகள் அல்ல.

### வட கொரியா

வடகொரியாவின் அணுசக்தி ஆலை விவகாரம் கொரியா தீபகற்பத்தை பெரும் நெருக்கடி நிலைக்குள் கொண்டு வந்திருந்தது.

வட கொரியா தனது அணுசக்தி ஆலைகளை சர்வதேச அணுசக்தி ஏஜென்சி உறுப்பினர்கள் பார்வையிட அனுமதிக்காத பட்சத்தில் வட கொரியா மீது ஐ.நா. மூலம் பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வரப் போவதாக அமெரிக்கா அறிவித்தது.

அமெரிக்காவின் நடவடிக்கையை ஒரு யுத்த பிரகடனமாகக் கருதப் போவதாக வட கொரியா தெரிவித்தது.

இந்த நிலையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தென் கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் விஜயம் செய்து இப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்து வைத்துள்ளார்.

1948 ஆம் ஆண்டு முதல் பதவியில் இருந்த கிம் இல் சுங் மரணம் அடைந்தது. அவரது மகன் கிம் ஜோங் — இல் புதிய தலைவராகப் பதவி ஏற்றது, வட கொரியாவைப் பொறுத்த வரை முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

### அங்கோலா

தன்ஸானியாவின் தலைநகரான லுஸாக்காவில் கடந்த நவம்பர் மாதம் அங்கோலா அரச தரப்புக்கும் ''யுனிட்டா'' கெரில்லாக்களுக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தம், இரு தரப்புக்கும் இடையிலான இரண்டாவது ஒப்பந்தம் ஆகும்.

இதற்கு முதல் 1991 ஆம் ஆண்டு யுனிட்டா கெரில்லா இயக்கமும் அரச தரப்பினரும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தனர். அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 1992 ஆம் ஆண்டு அங்கோலாவில் பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டது.

தேர்தலில் யுனிட்டா இயக்கம் தோல்வி அடைந்ததும் ஒப்பந்தம் குழம்பிப் போனது.

தேர்தலில் மோசடி நடைபெற்றதாகக் குற்றஞ்சாட்டி திரும்பவும் ஆயுதங்களைத் தூக்கிப் போராட்டத்தை ஆரம்பித்தது யுனிட்டா.

மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட கால நீண்ட சமாதான முயற்சிகளின் பின்னர் கடந்த நவம்பர் மாதம் லூஸாக்காவில் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்தாகி உள்ளது.

யுனிட்டா இயக்கத் தலைவர் சவிம்பி (Savimbi) பாதுகாப்பைக் காரணம் காட்டி கடைசி நேரத்தில் லூஸாக்கா செல்ல மறுத்துவிட்டார்.

எனினும் யுனிட்டா பிரதிநிதிகளும் அங்கோலா அரச தரப்புப் பிரதிநிதிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் மற்றும் ஒரு தடவை குழம்பாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

### தென் ஆபிரிக்கா

உலகில் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணப்பட்ட பிரதேசங்களில் தீர்வுகள் ஓரளவு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படும் நாடுகளில் தென் ஆபிரிக்காவும் ஒன்று.

தென் ஆபிரிக்காவில் கடந்த ஏப்பிரல் மாதம் நடைபெற்ற பல கட்சிகள் கலந்துகொண்ட முதலாவது பொதுத்தேர்தலில் கறுப்பின மக்களின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன்மண்டேலா (வயது - 76) 62.65 சதவீத வாக்குகள் பெற்று தென்ஆபிரிக்காவின் ஜனாதிபதியானார்.

தேர்தல் நடந்து 8 மாதங்கள் கழிந்த நிலையிலும் தென் ஆபிரிக்காவில் அதிகார மாற்றம் மிகவும் சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வெள்ளையர்களின் திறமை மிக்க ராணுவமும் கறுப்பர்களின் திறமையற்ற ராணுவமும் இணைந்துள்ள தென் ஆபிரிக்கா பலம் வாய்ந்த நாடாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

### அமெரிக்கா

வடகொரிய அணுசக்தி ஆலை விவகாரம், ஜோர்தான் — இஸ்ரேல் ஒப்பந்தம், ஹெய்ட்டிப் பிரச்சினை ஆகியவை சர்வதேச அரங்கில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் செல்வாக்கை உயர்த்திய போதிலும் —

பொஸ்னியப் பிரச்சினையும் அமெரிக்க உள்நாட்டு நிகழ்வுகளும் அவரின் செல்வாக்கை மோசமான அளவு பின்தள்ளி விட்டன.

பொஸ்னியப் பிரச்சினையைக் கையாள்வதில் கூட்டு முயற்சியால் ஏற்படக்கூடிய சிக்கல்களை ஜனாதிபதி கிளின்ரன் குறைவாக மதிப்பிட்டு விட்டார் என்றே கருதப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் ஜனநாயகக்கட்சி தோல்வி அடைந்தது. உள்நாட்டில் கிளின்ரனின் செல்வாக்கு வீழ்ச்சி அடைந்து வருவதை கோடி காட்டுகிறது.

குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள காங்கிரஸில் ஜனநாயகக்கட்சி ஜனாதிபதி ஒருவர் இருப்பது கடந்த 40 வருட காலத்தில் முதலாவது சம்பவம் ஆகும்.

கிளின்ரன், ஆர்கன்சாஸ் (Arkansas) மாநில ஆளுநராக இருந்த காலத்தில் பாலியல் வன்முறைச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்டது —

சர்ச்சைக்குரிய வைற்வாட்டர் (White Water Land) விவகாரம் — இருந்தும் கிளின்ரனின் கொள்ளை லாபமுட்டும் பண்ட முதலீடு — ஆகியவையே உள்நாட்டில் அவரது செல்வாக்கு வீழ்ச்சி அடைய பிரதான காரணங்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

### நைஜீரியா

ஆபிரிக்கக் கண்டத்தில் அதிக சனத்தொகை உள்ள நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் ஜனநாயக சக்திகளுக்கும் இராணுவ ஆட்சியாளர்களுக்கும் இடையில் தொடர்ந்து பலப்பரீட்சை நடைபெற்றுவருகிறது.

தம்மை நைஜீரியாவின் ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்த மொஷூட் அபியோலா தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

1993 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் மொஷூட் அபியோலா வெற்றிபெற இருந்த சமயம் தேர்தல் செல்லுபடியாகாது என்று இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்திருந்தனர்.

தற்போது பதவியில் உள்ள இராணுவ ஆட்சியாளரான சனி அபாச்சா (Sani Abacha) அதிகாரங்களை உடனடியாக விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை என்றே தெரிகிறது.

### சோமாலியா

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட ''புதிய உலக ஒழுங்கு''க்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சோமாலியா பிரச்சினை அமெரிக்காவுக்குப் பெரும் தோல்வி என்றே கருதப்படுகிறது.

சோமாலியாவில் பட்டினி நிலையை நீக்கவும், நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவும் அமெரிக்கா முதலில் தலையிட்டது.

ஆனால் அங்கு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரையும் வழிக்குக் கொண்டு வர அமெரிக்காவினால் முடியாமற் போய்விட்டது.

அமெரிக்கா தலைமையிலான அமைதிப் படையினர் ஏற்கனவே சோமாலியாவிலிருந்து வெளியேறிவிட்டனர்.

கடைசி ஐ.நா. படைகள் எதிர்வரும் மார்ச் மாதம் சோமாலியாவில் இருந்து வெளியேற உள்ளன.

சோமாலிய மக்கள் தமது பிரச்சினையை தாமே தீர்க்க மீண்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

## புத்தாண்டே, அமைதி தருவாய்!

அன்பு மலர இன்பம் விளைய
அறிவு உயர ஆக்கம் வளர
உண்மை ஒளிர உயர்வும் சேர
அனைவர் வாழ்வும் நிறைவாய் விளங்க
நன்மை ஒன்றே நாளும் ஓங்க
நானிலம் எங்கும் வளமை பெருக
இன்று பிறக்கும் புதிய ஆண்டே
அமைதித் தென்றலை வீசச் செய்வாய்!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

## கொண்டுவா, சுதந்திரம்!

விடிவை நோக்கிய பயணம் முடிந்து —
விரைவில் சுதந்திரம் தமிழர் பெற்றிட
அடிமை மண்ணிலே அகன்று போயிட
ஆயிரத்து தொளாயிரத்து —
தொண்ணூறு மறைந்தே மலர்ந்திடு
எத்தனை காலமாய் இப்படி வாழ்கிறோம்
ஏமாற்றம் தமிழர்க்கு இனிமேல் வேண்டாம்
புத்தம் புதிய சுதந்திர வாழ்வை —
கொண்டு வருவாய்
போரினை நிறுத்தி சமாதானம் தருவாய்

— காரை எம். பி. அருளானந்தன்.

## ஆறுதலை எதிர்பார்த்திடுவோம்!

புத்தாண்டு பிறந்திடும் வேளையிலே; நல்ல
புதுமைகள் தோன்றிட வேண்டிநிற்போம்.
தமிழர்கள் வாழ்வினில் ஒளி பிறக்க; நாம்
தாரணியில் சென்றெங்கும் உழைத்திடுவோம்.
வாழ்வினில் வறுமைகள் ஒழிந்துவிட; நமது
வாண்மையை வளர்த்திட வழி சமைப்போம்.
நாட்டினில் பசுமைகள் தோன்றிடவே; எமது
வீட்டிலும் பச்சைகள் நாட்டிடுவோம்
ஆண்டொன்று பிறந்திடும் போதினிலே; பெரும்
ஆறுதலை எதிர் பார்த்திடுவோம்!

— வண்ணை சே. சிவராஜா.

## புத்தாண்டே, மகிழ்ந்திட வா!

குரல்வளையை நெரிக்கின்ற சிங்களத்து ஆட்சியிலே
உரிமைக்குப் போராடும் தமிழர்படை மிக நெல்லாம்,
எரிகழலில் புடம்போடும் தங்கமென மிளிரவைக்க
விரிகின்ற நறுமலராய், புத்தாண்டே: எழில் தருக!
மண்கொண்ட இராணுவத்தின் திமிரடக்கும் —
தலைவனவன்
திண்டோளின் வலிமையுடன் மதிவளத்தின்
செயற்சிறப்பால்,
வன்னத்து மாவீரர் சாகரத்தில் படைசரித்து
விண்முட்ட புகழ் சேர்த்தார்; புத்தாண்டே;
மகிழ்ந்திட வா!

— ''மாவீரர் பிள்ளை''.

## புகழாரம் தொடுக்க நீ .. வா!

உரக்கத் தாலெடுத்து குவிக்கவெல்லாம் பாடட்டும்;
எங்களின் தேசத்தில் வெண்புறா பறக்கட்டும்.
கண்களில் கவலைகள் கலைந்தோடி —
உலங்கவிக்கட்டும்;
எண்ணங்களும் எதிர்பார்ப்பும் மெய்யாகி —
மகிழட்டும்
நன்மைகளும் நல்லவையும் நயமாக நடக்கட்டும்;
வாழ்வெனும் விளக்கினில் புதுஒளி பரவட்டும்.
புத்தாண்டே! புதுத்தாண்டே! — தமிழரின்
புகழாரம் தொடுக்க நீ பாய்ந்தோடி வருகவே!

— கபா. லோகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்லூரி
### பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புக்கள்:
07 - 01 - 1995 (சனி)
காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்

* G. A. Q.
* B. A. - I
* B. A. - II

பாடங்கள்:

1. ஆங்கிலம்
2. கிறீஸ்தவம்
3. தமிழ்
4. மொழியியல்
5. அரசியல்
6. மெய்யியல்
7. இந்து நாகரிகம்
8. பொருளியல்
9. நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)

துணைப் பாடங்கள்:

1. அடிப்படை ஆங்கிலம் (Basic English)
2. அடிப்படைக் கணிதம் (Basic Maths)
3. அளவையியல் (Logic)
4. முகாமைத்துவப் படிப்புக்கள்- (Management Studies)

**A/L English&Literature**
ஆரம்பம்: 07 - 01 - 1995
(சனி) மாலை 2மணி

★ இக்கற்கை நெறிகளில் சேர விரும்புவோர் 07.— 01 — 1995இற்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

[சி-83] — இயக்குநர்.


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஜெகதாஸ்
(இலங்கை வங்கி சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திரு. மு. கந்தையா காலஞ்சென்ற திருமதி க. செல்லாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் கந்தையா ஜெகதாஸ் (இலங்கை வங்கி, சாவகச்சேரி) 31 - 12 - 94 இல் காலமானார்.

இவர் திரு. க. ஜீவகதாஸ் (செயலாளர், அறவழிப் போராட்டக்குழு), க. ஜெகஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும். திருமதி ஜீ. ஈஸ்வரி (மக்கள் வங்கி, சாவகச்சேரி) அவர்களின் மைத்துனரும், செல்வன் ஜீ. சஞ்ஜீவனின் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மட்டுவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் 31-12-94 3.00 பி.ப. மணியளவில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. ஜீவகதாஸ்
(சகோதரன்)
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(34461)

### சுப்பிரமணியம் பரமேஸ்வரி
(பூமணி)

3 ஆம் கட்டை கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரி 30- 12-94 இல் சிவபதமடைந்தார்.

இவர் சறோஜினிதேவி (கனடா), சாரதாதேவி, விமலாதேவி (கனடா), விஜயலோஜினி [ஜேர்மனி), குமரேசன் (கனடா), குகானந்தன் [ஜேர்மனி), லோகநாதன் (ஜேர்மனி), மதுரவதனி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தராஜா. பத்மநாதன் திலகசுந்தரம், பாலச்சந்திரன், றஞ்ஜி, கலா, றூபி. ஞானேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், மகிந்தன், சுதர்சன், கௌசிகா, நிரஞ்சன், காருண்யா, கார்த்திகா, சாரங்கா, வினோஜன் ஆகியோரின் பேர்த்தியாரும், செ. இரத்தினசபாபதியின் அன்புச் சகோதரியும், மனோன்மணியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1- 1- 95 இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
க. பத்மநாதன்
(மருமகன்)
3 ஆம் கட்டை
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(34465)

### ஆறுமுகம் பொன்னுச்சாமி
[புளியங்கூடல்]

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த ஆறுமுகம் பொன்னுச்சாமி 30-12-94 ல் காலமானார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், விமலாதேவி, சாந்தினி (ஜேர்மனி), பத்மநாதன், குருநாதன் (ஜேர்மனி), சிவநாதன் (லிங்கம் கூல் பார்), ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா, தவலிங்கம் (ஜேர்மனி), கலைமகள் (சிலாபம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்லம்மா, அம்பலவாணர், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசையா ஆகியோரின் சகோதரரும், பார்வதிப்பிள்ளை, சிற்றம்பலம், அன்னலட்சுமி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அகிலன், தாட்சாயினி, லக்சனா, வித்தியாசினி, பவுத்தியா, நீசான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-1-95) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ. சிவநாதன்
(மகன்)
36, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை.
(34469)

## வாழைச்சேனை ஆஸ்பத்திரியில்
# 3 தமிழர்களின் சடலங்கள் படையினரால் ஒப்படைப்பு!

கொழும்பு, ஜன. 1

மூன்று தமிழ்இளைஞர்களின் சடலங்கள் கடந்த புதனன்று இராணுவத்தினரால் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்களில்துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காணப்பட்டன.

வாகனேரியைச் சேர்ந்த பொன்னுத்துரை ஞானரத்தினம் (வயது 20), அமரசிங்கம் கோபாலன்(வயது 20) கிரானைச் சேர்ந்த சிவலிங்கம் கருணைராஜா (வயது15) ஆகியோரது சடலங்களே அவை என உறவினர்களால் அடையாளங்கள் காணப்பட்டுள்ளன.

பூலாங்காடு என்னும் வயல் பிரதேசத்தில் இம் மூன்று இளைஞர்களின் சடலங்களும் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## நினைவுக்கல் நடுதல்

யாழ்ப்பாணம், ஜன. 1

மணலாறில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் ஜீவனின் (சின்னத்துரை தங்கேஸ்வரன்- தாளையடி) நினைவுக் கல் நடுகை இன்று நடைபெறவுள்ளது.

வித்துடல் கிடைக்காததால் அவரது உருவப்படம் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12. 30 மணியளவில் வத்திராயன் ச. ச நிலையத்தில் வைக்கப்படும்.

அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து உருவப்படம் அணிவகுப்பு மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படடு இராணுவ மரியாதைகளுடன் அங்கு நினைவுக்கல் நடப்படும். (ஐ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 1

மட்டக்களப்பில் கடந்த வியாழனன்று இரு போராளிகள் நீரில் மூழ்கி வீரச்சாவடைந்தனர்.

குணநேசன் [சினித்தம்பி கமலேஸ்வரன் - மட்டக்களப்பு) அரவாகனன் (கனகசுந்தரம் விஜயகுமார் - அம்பாறை) ஆகியோரே வீரச்சாவடைந்தனர். (ஐ-4)


## லயன் எயர் விமான சேவை!

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று பாப்பரசரிடம் ஆசீர்வாதம் பெறச் செல்வோருக்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு:
யாழ்ப்பாணத்திலிருந்துவவுனியாவிற்கும்வவுனியாவில் இருந்து விமான மூலம் கொழும்பிற்கும் அங்கிருந்து மீண்டும் விமான மூலம் வவுனியாவிற்கும் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் தங்குமிட வசதிகளுடன் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ரூபா 5,000/— மட்டுமே

விவரங்களுக்கு:
தத்தம் பகுதி பங்குத் தந்தையுடன் கத்தோலிக்கர்கள் தொடர்பு கொள்ளவும்.

★ குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளன ★

(8158)



## சைவ பரிபாலன சபை வெளியீடுகள்
# விற்பனையாகின்றன

| | | |
|---|---|---|
| 01. | தஞ்சை வாணன் கோவை | — ரூபா 75/- |
| 02. | கந்தபுராணம் | — ரூபா 10/- |
| 03. | நித்திய கருமவிதி | — ரூபா 10/- |
| 04. | பாலபாடம் 8ஆம் புத்தகம் | — ரூபா 10/- |
| 05. | பாலபாடம் 6ஆம் புத்தகம் | — ரூபா 10/- |
| 06. | பாலபாடம் 2ஆம் புத்தகம் | — ரூபா 05/- |
| 07. | திருப்பாசுரம் (ஆங்கிலம்) | — ரூபா 10/- |
| 08. | சைவசித்தாந்தம் (ஆங்கிலம்) | — ரூபா 15/- |
| 09. | ஆறுமுகநாவலர் (ஆங்கிலம்) | — ரூபா 05/- |
| 10. | இலக்கணச் சுருக்கம் | — ரூபா 65/- |

கிடைக்குமிடம்:
**சைவப்பிரகாச அச்சியந்திரசாலை**
450, காங்கேசன்துறைசாலை,
யாழ்ப்பாணம்.

[சி-10130]



யாழ். மாவட்ட
## மெய்வன்மை வீரர்களுக்கு திறமையை வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம்!

யாழ். மாவட்ட
அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
**யாழ். றோட்டறிக் கழக**
ஆதரவுடன் நடத்தும்
## மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள்
பெப்ரவரி முதல் வாரத்தில்!

விண்ணப்பப் படிவங்களை பெற:
சண். தயாளன்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யா.மா.அ.மெ.ச.
[சி-10131]


## ஜகர்த்தாவில் 14 இலங்கையர் கைது!

ஜகர்த்தா, ஜன. 01

இந்தோனேஷிய மாணவர்கள் எனத் தெரிவித்து— போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து— அங்குள்ள பல்கலைக்கழகத்தில்''பெர்மிட்'' பெற முயற்சித்த 14 இலங்கையர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்தனர்' (உ)

### முக்கிய...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினரும் கூட்டாக ஈடுபட்டுள்ளதாக மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா, அஷ்ரப், கதிர்காமர், நீலன் ஆகியோரைப் படுகொலை செய்வதே புலிகளின் திட்டம் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார் என்று ''தினமின'' மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ-10)

### இராணுவத்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமரச முயற்சிகளுக்கு இயக்கத்தில் உள்ள சகல போராளிகளும் ஒத்துழைப்பு வழங்குவார்கள்''— என்று பதில் அளித்திருக்கிறார்—

புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமரச முயற்சிகள், இருசாராருக்கும் இடையில் நிலவிய அவநம்பிக்கை காரணமாகத் தேக்க நிலையை அடைந்திருந்தது—

இராணுவத்தின் பிடிக்குள் அரசின் தலைமைப்பீடம் சிக்குண்டு விட்டதாக புலிகள் குற்றஞ்சாட்டி வரும் இந்த வேளையில் —

இராணுவத் தரப்பினால் வழங்கப்பட்டிருக்கும் இந்த உறுதிமொழி அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் நீக்கி சமரச முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பு ஒன்றை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.— இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-க)

### நோயாளரை—
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காவலர்கள் தொடர்ந்தும் முன்னர் இருந்து வந்த நடைமுறைகளை கையாண்டு, நோயாளர்களை பார்வையிட வருவோரை சோதனை செய்தல், ஒதுக்கப்படாத நேரத்தில் வைத்தியசாலைக்குள் நோயாளர் தவிர்ந்த ஏனையோர் வார்டுகளுக்குள் செல்வதை கண்காணித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-4)

### அமைச்சர்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தையும் சப்புக்கட்டை போட்டதையும் தவிர?''

''நாம் ஒவ்வொருநாளும் கூடி நிலைமையை ஆராய்ந்து வருகிறோம். அவருடன் எல்லா வழிகளிலும் நாம் போராடுவோம். வெறும் அரட்டல், புரட்டல்களுடன் அவர் தப்பிச் செல்ல நாம் அனுமதிக்க மாட்டோம்''.— இப்படி தேரர் மேலும் கூறினார். (உ)

### புலமைப் பரிசில்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளிகள் பெறும் முதல் பத்து மாணவர்களுக்கும் ஜப்பான் செல்ல வாய்ப்பு உள்ளதாலேயே இவ்வாறு புள்ளிகள் திருத்தப்பட்டதாக 'ராவய' சிங்கள வாரஇதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இப்பரீட்சையின் பெறுபேறுகளை மீள் பரிசிலனை செய்யும் உரிமை மாணவர்களுக்கு இல்லாத காரணத்தினால் இவ்வகையான ஊழல்களை மூடிமறைக்க பெரும் வாய்ப்புகள் உள்ளன.

இது தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொண்டால் பல ஊழல்கள் அம்பலத்துக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

### 2ஆம் கட்ட
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துப் பேசுவதற்கு அரசு இணங்கியுள்ளது.

எனினும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் அரச தரப்பில் கலந்து கொள்ளவுள்ள பிரதிநிதிகளின் விவரங்கள் எதுவும் அனுருத்தவின் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ)


## நன்றியுரைத்து மகிழ்கின்றேன்

★ ★

இறைவன் குருவடிவாய் வந்து அருள் புரிகின்றான். இறைவன் கருணையினால் குருவடிவாய் நின்று புலமைப் பரிசிற் தேர்வில் சித்திபெறத்துணை நின்ற அதிபர் முதலான ஆசிரியத் தெய்வங்களை

# நன்றியுரைத்து மகிழ்கின்றேன்

செல்வி பிரியதர்சினி தர்மகுலசிங்கம்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
(சி/10132) யாழ்ப்பாணம்.



## புதுவருட வாழ்த்துக்கள்
# மலிவு விற்பனை

15 — 01 — 95 பொங்கல் தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நீடிக்கப்பட்டுள்ளது. சகல விதமான புடைவைகளுக்கும் விசேட கழிவுண்டு.

# லைடன் புடைவை நிலையம்
(தீவகம்)
249, இராசன் வீதி
(மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

[சி-96]


## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை அம்பலவாணர்
[ஓய்வுபெற்ற தொழிற் திணைக்கள உத்தியோகத்தர்]

காரைநகர் — வலந்தலையை பிறப்பிடமாகவும், 342, ஆஸ்பத்திரி வீதியில் வசித்தவருமான சிதம்பரப்பிள்ளை அம்பலவாணர் நேற்றுக் காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சிவந்தினி, சிவலலிதா, இந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி, தில்லைநாதன், பார்வதி (ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு இலாகா), பொன்னம்பலம் (ஆசிரியர் - ஆ. தி. ம.ம. வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும்—

காலஞ்சென்றவர்களான கதிரவேலு, கந்தசாமி, நடராசா மற்றும் கனகசபை, சோமசுந்தரம், பொன்னம்பலம், திருநாவுக்சரசு ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற அருணாசலம்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-1-95) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அ. மங்கயர்க்கரசி
(மனைவி)
(34473)

### இராசதுரை சிவபாதம் (பவுண்)

வண்ணார்பண்ணை பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த இராசதுரை சிவபாதம் 29 - 12 - 1994 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் நா. இராசதுரை - காலஞ்சென்ற இ. இரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், பத்மினியின் (பேபி - சுவிஸ்), அன்புக் கணவரும், சாருஜன் (சுவிஸ்), நீலுஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற க. மாணிக்கவாசகர் - தவமணி (சொர்ணவ லி) தம்பதிகளின் மருமகனும், சு. இராஜேஸ்வரி, துரைசிங்கம், ஆனந்தராசா (மைக்றோ ஓட்டோ வேக்ஸ்), பொன்ராசா, தவனேஸ்வரி, இரவீந்திரன், ஜெகதீஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமார் (சுவிஸ்), சந்திரன், செந்தில்நாதன் (சுவிஸ்). பிறேமினி, செல்வி (பிலிப்பைன்ஸ்), தர்சினி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், கோமேஸ்வரி, நிர்மலா, ஜெயலக்சுமி, பஞ்சலிங்கம், யசோ ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-1-95) பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சு. ஜெயக்குமார்.
(மருமகன்)
3/3, பத்திரகாளி கோயிலடி.
வண். வட மேற்கு,
யாழ்ப்பாணம்.
(34472)

சகோதரி
### டொறத்தி திரவியம் பொன்னையா

''கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர்பார்வைக்கு அருமையானது''
சங். 116:15

பலவருடகாலமாக தேவபணியாற்றிவந்த சகோதரி டொறத்தி திரவியம் பொன்னையா அவர்கள் (31—12—1994) நேற்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (1-1-95) பி. ப. 3 மணிக்கு அன்னார் வசித்துவந்த, இருபாலை கிழக்கிலுள்ள கானான் ஜெப ஆலய, கிளை ஆலயத்தில் நடைபெறும். நல்லடக்கம் மாலை 4 மணிக்கு இராஜவீதி, கோப்பாய் வடக்கிலுள்ள கானான் ஜெப ஆலய சேமக்காலையில் நடைபெறும்.

தகவல் :
போதகர்
கானான் ஜெப ஆலயம்,
இருபாலை.
(34471)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01--01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.